உ

Koviloor Digital Library

ஜெய ஜெய புவனேஸ்வரி ஜெய ஜெய புவனேஸ்வரி

ஸ்ரீ சரபமஹாமந்திர லக்ஷ ஹோம ஞாபகார்த்த வெளியீடு

4-6-71 முதல் 1-7-71 முடிய மண்டலம்

எழுதியவர் : டாக்டர் K. வைத்யநாத சாஸ்திரி
அதிஷ்டானம், புதுக்கோட்டை
&
ப்ரம்மஸ்ரீ மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரிகள்

ஸ்ரீ கோவிலூர் மடாலயம்
KOVILOOR
MADALAYAM

ஸ்ரீ சரபேச்வர மஹா யந்த்ரம்



ADHISHTANAM. SRI SARABHESWARA MAHA YANTRAM. PUDUKKOTTAI.

ACC. NO.
4225

வெளியீடு :
ஸ்ரீ ஸதாசிவ பிரும்மேந்திர
ஸரஸ்வத்யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம்
புவனேச்வரி நகர் :: புதுக்கோட்டை.

ஜெய ஜெய புவனேஸ்வரி ஜெய ஜெய புவனேஸ்வரி

திருச்சிராப்பள்ளி செயின் பிரிண்டர்ஸார் அன்பளிப்பு.

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

Koviloor Digital Library

वर पाशांकुशाभीति लसद्बाहुचतुष्टयां ।

नवसालपुरावासां नमामि भुवनेश्वरीम् ॥

வர பாசாங்குசாபீதி லஸத்பாஹுசதுஷ்டயாம் |

நவஸாலபுராவாஸாம் நமாமி புவனேச்வரீம் ||

வரம் பாசம் அங்குசம் அபயம் இவை திகழும் நான்கு திருக்கரங்கள் கொண்டவளும் புதுக்கோட்டையில் வீற்றிருப்ப வளுமான ஸ்ரீ புவனேச்வரியை வணங்குகிறேன்.

Koviloor Digital Library

ईशस्येच्छा कुण्डली ह्रींस्वरूपा
सर्वान्तस्स्था चिन्त्यते यैः सदैव ।
लोकोद्धारासक्तचित्तान्गुरूंस्तान्
वन्दे शान्तानन्दनाम्नो यतीन्द्रान् ॥

ஈசஸ்யேச்சா குண்டலீ ஹ்ரீம்ஸ்வரூபா
ஸர்வாந்தஸ்ஸ்தா சிந்த்யதே யை: ஸதைவ ।
லோகோத்தாராஸக்தசித்தான் குரூம்ஸ்தான்
வந்தே சாந்தானந்தநாம்னோ யதீந்த்ரான் ॥

ஈசனின் இச்சையாகியவளும் குண்டலீ ரூபிணியும் ஹ்ரீங்கார ரூபிணியும் எல்லாப் பொருள்களிலும் உள்ளே விளங்குகின்றவளுமாகி புவனேச்வரீயை எப்போதும் சிந்திப்பவரும் உலகத்தை நல்வழிப்படுத்த ஆசைகொண்டவரும் சந்யாஸிகளில் சிறந்தவருமான ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகளை வணங்குகின்றேன்.

Koviloor Digital Library

ஸ்ரீ ஸத்குரு ஸதாசிவ ப்ரும்மேந்த்ர ஸரஸ்வத் யவதூத ஸ்வாமிகள் அதிஷ்டானம்

கீழ 7-ம் வீதி, புதுக்கோட்டை – 1. (திருச்சி ஜில்லா)

अनन्याश्चिन्तयन्तो मां येजना : पर्युपासते ।

तेषां नित्याभियुक्तानां योगक्षेमं वहाम्यहं ॥

அநந்யாச்சிந்தயந்தோமாம் யேஜநா : பர்யுபாஸதே

தேஷாம் நித்யாபியுக்தானும் யோகக்ஷேமம் வஹாம்யஹம்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் தன் பக்தன் அர்ஜுனனுக்கு இவ்வாறு எடுத்துரைக்கிருர். "பிரபஞ்ச விஷயங்களை அறவே மறந்து எவர் என்னை மனம், வாக்கு, சரீரம் எனும் மூன்று கரணங்களாலும் அனன்யசித்தர்களாய் இடைவிடாது தியானித்து உபாஸிக்கின்ருர்களோ, அவர்களுடைய எல்லா யோக க்ஷேமங்களையும் நானே பொறுப்பேற்று வஹித்து அவர்களை எல்லாவிதமான பயத்தினின்றும், துன்பத்தினின்றும் காப்பாற்றி அவர்களுக்கு ஸகலவிதமான க்ஷேமங்களையும் நான் அளிக்கின்றேன்" என்று அவர்களது முயற்சியின்றி அவர்களுக்கு அநந்ய பக்தர்களுக்கு தான் அளிக்கும் ரக்ஷிப்பைப்பற்றி உறுதி கூறுகின்ருர் பகவான்.

பிரபஞ்ச மாயையில் சிக்கி சுழன்று அநித்ய வாழ்வில் மயங்கி நிற்கும் நம்போன்றவர்களா இப் பிரபஞ்சத்தையும் அதன் மாயையும் அறவே மறந்து அநந்ய சிந்தையுடன் பகவானை ஸதா தியானிக்க முடியும்? நாம் எதையும் மறந்து பகவானை தியானிக்காத காரணத்தினுலேயே பரம காருண்ய மூர்த்தியாயினும் அந்த ஈச்வரனிடம் பூர்ண ரக்ஷிப்பைப் பெற முடியாமல் பல இன்னல்களுக்காளாகிருேம்.

Koviloor Digital Library

அப்படிப் பிரபஞ்சத்தையும் அநித்ய விஷயங்களையும் மறக்கவும் இறைவனை ஏகவிக்ர சித்தத்துடன் சிந்திக்கவும் முடியாமல் தவித்தலையும் நம்போன்றவரைக் காத்து கரையேற்றுவிக்க, பிரபஞ்ச வாழ்வையும் அநித்ய சுகபோகங்களையும் அறவே துறந்து மெய்த்தவத்தில் நின்ற ஞானிகளும் யோகிகளும் தபஸ்விகளுமான மஹான்கள் நம்மிடம்கருணைகொண்டார்கள். தாம்கண்ட தெய்வத் திருவருளை நமக்கு பகிர்ந்து கொடுக்கவும் முயற்சி கொண்டார்கள். நாம் பெறுதற்கரிய தெய்வப் பேரருளை நாம் எளிதில் பெற்று நலம் பெறவும் துணை செய்தார்கள்.

நாம் காலத்திலும் காரியத்திலும் சாதிக்க முடியாத தெய்வப் பணிகளைச் செய்து உழைக்காத நமக்கும் உதவி புரிந்தனர் மஹாத்மாக்கள்.

இந்த உண்மையை "ஆண்டியும் அரசனுமன்றி யார் செய்வர்" என்ற மூதோர் பழமொழியால் அறிகின்றோம்.

பாப துன்பம் நிறைந்த உலக வாழ்வை உதறி எறிந்து அரிய தெய்வத்தவத்தை கைக்கொண்ட மஹான்களாலேயே தான் நாமனைவரும் பெறுதற்கரிய பேறுகளைப் பெறலாமே தவிர நம் முயற்சிகள் பயன்பெரு. அல்லது நீதியையும் தர்மத்தையும் காத்துவரும் அரசர்களின் தெய்வப்பணியாலும் அவன் மக்கள் தெய்வ அருள்பெற்று இன்னல் இடையூறின்றி க்ஷேமம் பெறவும் இடமிருந்தது.

நமது ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள் அவர்களும் அந்த மஹான்கள் மரபில் அவதரித்த ஆண்டியாவார். அவர் நம்மிடம் கருணைகொண்டு தன் அரிய தபஸையும் சற்று மறந்து நம்மிடை புகுந்து நமக்காக செய்தற்கரிய புண்ய காரியங்களை — நாம் பயன்பெற சாதித்தருளினர் என்பது உலகமறிந்த உண்மை. அவை பொன்னேடுகளில் பொறிக்கவும் போற்றவும் தக்கதாகும்.

1. 20—5—56ல் ஸ்ரீ ஸதாசிவ பிரும்மேந்திர ஸரஸ்வத்யவதூதஸ்வாமிகள் என்று உலகம் புகழும் ஜட்ஜ் ஸ்வாமிகளின்

Koviloor Digital Library

அதிஷ்டானத்தை சீரிய கோயிலாக்கி ஸ்ரீ தத்தாத்ரேய பகவானை அங்கு பிரதிஷ்டை செய்தார்.

2. பிருதிவிக்கும் பிராணி வர்க்கத்திற்கும் மூலக்கடவுளான ஸ்ரீ மஹா கணபதிக்கு 15—8—57ல் ஷோடச த்ரவ்ய லக்ஷ ஹோமம் நடத்திவைத்தார்.

3. பிறகு ஸகல தீமைகளுக்கும் சாந்தியளிக்கும் ருத்ர ஸூக்தங்களால் மஹா ருத்ர ஹோமம் 25—5—58ல் செய்து வைத்தார்.

4. அதன்பிறகு விண்ணுக்கும் மண்ணுக்கும் அதிதேவதைகளான ஆதித்யாதி நவக்கிரஹங்களுக்கு வைதிக தாந்திரிக மஹா மந்த்ரங்களால் 19—5—59ல் நவக்கிரஹ லக்ஷ ஹோமம் நடத்தி வைத்தார்.

5. பின்னர் 6—6—62ல் அகில புவனங்களையும் ஆக்கி அரவணைத்து காக்கும் அன்னை புவனேச்வரியை பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்து வைத்தார்.

6. அன்னை பராசக்திக்கு நித்ய ஸாந்நித்தியம் ஏற்பட்டு அனுக்ரஹமூர்த்தியாய் விளங்க இதற்குமுன் இந்தவிதம் நடந்திராத முறையில் ஸஹஸ்ர சண்டீ யக்ஞத்தை 25-5-63 முதல் 2—6—63 முடிய நடத்திவைத்தார்.

7. அதன்பிறகு ஸகல இடையூறுகளும் விலகி அஷ்டைஸ்வர்யத்தையும் மக்கள் பெற 22—5—64ல் ஸ்ரீ ஸூக்தஸம்புடிதமாய் லக்ஷ ஸ்ரீ ஸூக்த மஹா கணபதி ஹோமம் நடைபெற்றது.

8. பின்பு அன்னை ஸ்ரீ புவனேச்வரியின் ஆக்ஞையின்படி ஸ்ரீ புவனேச்வரிக்கு 5—6—65 முதல் 8—6—65 வரை கோடி புவனேச்வரீ மந்த்ரயக்ஞம் நடைபெற்றது.

9. ஸ்ரீ புவனேச்வரியின் ஸன்னிதியில் 30—5—66ல் இதுவரை கண்டிராத ஸ்ரீ பூர்ண மஹாமேரு ஸ்ரீ சக்கரத்தை பிரதிஷ்டை செய்தார். அதன் ஸன்னிதியில் 48 நாள்வரை

Koviloor Digital Library

நித்ய சண்டீ ஹோமம் செய்து மண்டலாபிஷேக தினத்தன்று சத சண்டீ மஹாயக்ஞத்தை செய்து பூர்த்தியாக்கினர்.

10. பின் 24—2—67 முதல் 3—6—67 வரை நூறு நாட்கள் ஸ்ரீ பூர்ண மேரு சக்ரத்திற்கும் ஸ்ரீ புவனேச்வரி மாதாவுக்கும் கோடி நாமார்ச்சனைகள் நடைபெற்றது.

11. அதன்பிறகு, பாரதத்தின் பல பக்கங்களில் யுத்த முழக்கம் ஒலித்ததின் காரணமாக சத்ரு பயம் நீங்க 4–6–68 முதல் 6–6–68 முடிய மஹா ஸுதர்சன ஹோமம் சிறப்பாய் நடைபெற்றது.

12. துஷ்ட நிக்ரஹத்திற்காகவும் சிஷ்டபரிபாலனத்திற்காகவும் அன்னை ஸ்ரீ சூலினீ துர்க்கைக்கு 27—5—69ல் சாந்தி துர்கா சூலினீ மஹா மந்த்ரங்களால் சாந்தி துர்கா சூலினீ லக்ஷ மந்த்ர ஹோமம் நடைபெற்றது.

13. அதன்பின் 17—5—70-ல் லக்ஷ்மிகடாக்ஷத்தின் நிமித்தமாக நித்ய ஸ்ரீ நித்ய மங்களம் எங்கும் செழிக்க மஹா லக்ஷ்மீ மந்த்ரங்களால் மஹா லக்ஷ்மீ லக்ஷ மந்த்ரஹோமம் நடைபெற்றது.

14. அதன் பிறகு அன்னை ஸ்ரீ புவனேச்வரியின் அருள் வாக்கின்படி நமது ஸ்வாமிகள் அவர்கள் கனவெல்லாம் நனவாகி அவர் கொண்ட ஸங்கல்பமெல்லாம் ஸத்யமாகி, உலகில் யாவரும் நிகழ்ச்சிகளை வியந்து சிந்திக்கும் வண்ணம், ஸ்வாமிகளின் குருபிரானின் புண்ய க்ஷேத்ரமாகிய சேலத்தில், பக்தர்களை காந்தம்போல் தன்பால் இழுக்கும் ஸ்கந்தகிரி தனில் என்றும் வேதங்கள் முழங்கி உலகமுய்விக்க யஜுஸ் ஸாமவேத பாடசாலைகளை 31—10—69ல் தோற்றுவித்து அத்தலத்தை வேதநாதம் எங்கும் ஒலிக்கச் செய்தார்.

ஜ்யோதிர்மயமான ஸ்கந்தனின் அருள் பிழம்பு எங்கும் வழிய, மாயை இருள் மடிய, திருக்கார்த்திகையன்று உன்னத சிகரத்தில் எங்கும் ஒளிவீசும் புண்ய தீபத்தை வருஷந்தோறும் அங்கு ஏற்றிவருகின்றனர்.

Koviloor Digital Library

அன்னை அஷ்டாதச புஜங்களோடு கூடிய மஹா லக்ஷ்மீ துர்க்கையையும் அவள் தனயன் ஞானஸ்கந்தனையும் அவர்கள் இருவரும் சேர்ந்து நின்று அருள்பாலிக்க புருஷாகிருதியுடனும் பூர்ண பொலிவுடனும் புன்முறுவல் பூத்த முகத்துடனும் அடியார்கள் இடரை அறவே அழித்து காக்க அபயக் கரத்துடனும் 8—2—71ல் பிரதிஷ்டை செய்தார்.

இத்தகைய அரிய புண்ணிய காரியங்களை பெருந்தவம் படைத்த ஆண்டியாலன்றி பொருள்ச் செல்வம் பெற்ற மாந்தருக்கு சாத்தியமாகுமாவென்று சிந்தித்துப் பார்ப்பவருக்கு தெள்ளென விளங்கும். தவச் செல்வம் படைத்த தகைமைசால் முனிவர்களுக்கு இவை முடியும் காரியமாகும்.

அதேபோன்று இவ்வருஷமும் உலகத்தின் கொடிய துன்பங்கள் தீர ஸ்ரீ சரபேச்வர ருத்ர ஹோமத்தை 28 நாட்களில் செய்து முடிக்க ஸ்வாமிகள் ஸங்கல்பித்துள்ளார்கள்.

கொடிய சத்ருக்களை அழித்து தீராத இன்னல் தீர்த்து சரணமடைந்தவர்களுக்கு அபயமளிக்கும் தெய்வம் ஸ்ரீ சரப ருத்ரன் ஒருவனே என்று வேதங்கள் கூறுகின்றன.

மேலும், அபாயத்தினின்றும், சத்துருக்களிடமிருந்தும், வியாதிகளிலிருந்தும், பயங்கரமான காட்டிலிருந்தும், வன மிருகங்களிலிருந்தும், கொடிய விஷ ஸர்ப்பங்களிலிருந்தும், அக்னி பாதையிலிருந்தும், எலி, பெருச்சாளி முதலிய ஜந்துக்களிடமிருந்தும், யானை, கரடி முதலிய மிருகங்களிடமிருந்தும் நமக்கு எதிரிகளான பிராணிகளிடமிருந்தும், துஷ்ட பூத கணங்களிடமிருந்தும், பெரியோர், தெய்வம், குரு, கிரஹங்கள் போன்றவரின் கோப சாபத்திலிருந்தும், நமது உயிரை மாய்க்கும் எமனிடமிருந்தும், அபயம் வேண்டுமாயின் ஸர்வ ரக்ஷகனை ஸ்ரீ சரப ருத்ரனை சரண் அடைந்து ரக்ஷையை அவரிடம் வேண்டுங்கள் என்று பின்வரும் அதர்வ வேதம் உபதேசிக்கின்றது.

Koviloor Digital Library

"पायान्नो देव : शरभस्त्वपायान्
सदारिरोगात् विपिनोरगाभ्यां ।
वैश्वानराखु करिऋक्षकेभ्य :
परेभ्यो भूतेभ्यो रुष : कृतान्तात् ॥"

பாயாந்நோ தேவ: சரபஸ்த்வபாயாத்
ஸதாரி ரோகாத் விபிஞோரகாப்யாம்
வைச்வானராகு கரிரிக்ஷகேப்ய:
பரேப்யோ பூதேப்யோ ருஷ: கிருதாந்தாத்.

என்று கூறும் அதர்வ மந்திரத்தின் மகிமை பொய்க்காதது. பாபங்களை போக்கி ரக்ஷிக்கவல்லது என்று புகழப்படுகின்றது. மேலும் சரப காயத்ரியை, மந்திர சாஸ்திரங்கள் சரபாஸ்திரமென அதை வர்ணிக்கின்றது. பெரிய அஸ்திரங்கள் சத்துருக்களை அழித்து எய்தவருக்கு பெரும் வெற்றியைத் தேடித் தருகின்றனவோ, அதேபோல இந்த அஸ்திரமும் ஜபிப்பவரது சத்துருக்களையும் இன்னல்களையும் தீர்த்து, ஸர்வ மங்களங்களையும் கொடுக்கவல்லது. இதன் பிரபாவத்தைத் தாங்க தேவர்களும் அசுரர்களும்கூட அஞ்சுகின்றனர் என்று

एतदस्त्रं महामन्त्रं जपेद्यत्नात् सदांबिके ।
शरभास्त्रमिदंप्रोक्तं अमोघं जयवर्धनं ।
तत्प्रभावं दृशाद्रष्टुं नसहन्तेऽमराऽसुरा : ।

ஏததஸ்த்ரம் மஹாமந்த்ரம் ஜபேத்யத்நாத் ஸதாம்பிகே
சரபாஸ்த்ரமிதம்ப்ரோக்தம் அமோகம் ஜயவர்த்தனம்
தத்ப்ரபாவம் திருசாத்ரஷ்டும் நஸஹந்தேமராஸுரா:
போற்றப்படுகிறது.

இந்த வேதப் ப்ராம்ணுய்த்தை மனதில் கொண்டு நமது ஸ்வாமிகள், சகல பலன்களும் ஸித்திக்க அதர்வவேத மந்திரத்தையும் சர்பாஸ்திர மஹாமந்திரத்தையும் முன்னும் பின்னும் ஸம்புடனம் செய்து ஸ்ரீ சரப மஹா மந்திரங்களால் காலாக்னிருத்ர ரூபமான அக்னியில் ஆஹுதி என்ற ஹவிர்ப்பாகத்தை

Koviloor Digital Library

பரமேச்வரனுக்கு அர்ப்பணிக்க ஸங்கல்பித்துள்ளார்கள் நமது கருணாமூர்த்தியான ஸ்வாமிகள் அவர்கள்.

இந்த யக்ஞத்தில் இத்துடன் வெளியிடப்படும் ஸ்ரீ சரபாஷ்டகமென்ற ஸ்தோத்திரத்தை ஆண் பெண் அனைவரும் தினமும் காலை மாலை முடிந்தவரை பாராயணம் செய்து வர அவர்களுக்கு சர்வ பாபங்களும் ஆதி வியாதிகளும் துன்பங்களும் தீருவதுடன் சகல அபீஷ்டங்களும் பூர்த்தியாகி க்ஷேமங்கள் பெருகுமென்பது ஸத்யம்.

உ. தேவகோட்டை KOVILOOR MADALAYAM மடாலயம்

श्री शरभेश्वराष्टकस्तोत्रम् ।

ஸ்ரீ சரபேச்வராஷ்டக ஸ்தோத்ரம்

ध्यानं த்யானம்

ज्वलनकुटिलकेशं सूर्यचन्द्राग्निनेत्रं
निशितकर नखाग्र स्यूतसिंह्मास्यदेहं ।
शरभमथ मुनीन्द्रैः स्तूयमानं सितांगं
प्रणतभयविनाशं भावयेत्पक्षिराजं ॥

ஜ்வலனகுடிலகேசம் ஸூர்யசந்த்ராக்னிநேத்ரம்
நிசிதகர நகாக்ர ஸ்யூதஸிம்மாஸ்யதேஹம் ।
சரபமத முனீந்த்ரை: ஸ்தூயமானம் ஸிதாங்கம்
ப்ரணதபயவிநாசம் பாவயேத் பக்ஷிராஜம் ॥

स्तोत्रं ஸ்தோத்ரம்

देवादिदेवाय जगन्मयाय
शिवाय नालीकनिभाननाय ।
शर्वाय भीमाय शराधिपाय
नमोस्तु तुभ्यं शरभेश्वराय ॥

தேவாதிதேவாய ஜகந்மயாய
சிவாய நாளீகநிபாநநாய ।
சர்வாய பீமாய சராதிபாய
நமோஸ்து துப்யம் சரபேச்வராய ॥

திருவருள் தேவகோட்டை A. No. 6885

Koviloor Digital Library

हराय भर्गाय हरिप्रियाय
भवाय शान्ताय परात्पराय ।
मृडाय रुद्राय विलोचनाय
नमोस्तु तुभ्यं शरभेश्वराय ॥

ஹராய பர்காய ஹரிப்ரியாய
பவாய சாந்தாய பராத்பராய।
ம்ருடாய ருத்ராய விலோசநாய. (நமோஸ்து)

शीतांशुचूडाय दिगंबराय
सृष्टिस्थितिध्वसनकारणाय ।
जटाकलापाय जितेन्द्रियाय ॥ नमोस्तु

சீதாம்சுசூடாய திகம்பராய
ஸ்ருஷ்டிஸ்திதித்வம்ஸநகாரணாய ।
ஜடாகலாபாய ஜிதேந்த்ரியாய. (நமோஸ்து)

श्रीकालकण्ठाय भवान्तकाय
कपाल शूलांक करांबुजाय ।
भुजंगभूषाय पुरान्तकाय ॥ नमोस्तु

ஸ்ரீ காலகண்டாய பவாந்தகாய
கபால சூலாங்க கராம்புஜாய ।
புஜங்கபூஷாय புராந்தகாய. (நமோஸ்து)

शमादिषट्काय यमान्तकाय
यमादियोगाष्टक सिद्धिदाय ।
उमाधिनाथाय पुरान्तकाय ॥ नमोस्तु

சமாதிஷட்காய யமாந்தகாய
யமாதியோகாஷ்டக ஸித்திதாய ।
உமாதிநாதாய புராந்தகாய. (நமோஸ்து)

Koviloor Digital Library

कालाय देवामृतकन्दलाय
कल्याण कौतूहल कारणाय ।
स्थूलाय सूक्ष्माय सुरूपकाय ॥ नमोस्तु

காலாய தேவாம்ருதகந்தளாய
கல்யாண கௌதூஹல காரணாய |
ஸ்தூலாய ஸூக்ஷ்மாய ஸுரூபகாய. (நமோஸ்து)

घृणादिपाशाष्टक वर्जिताय
नृसिंहदर्पाग्नि विनाशकाय ।
गुणादिहीनाय गुणत्रयाय ॥ नमोस्तु

க்ருணாதிபாசாஷ்டக வர்ஜிதாய
ந்ருஸிம்மதர்பாக்னி விநாசகாய |
குணாதிஹீநாய குணத்ரயாய. (நமோஸ்து)

पंचाननायाखिलभास्कराय
पंचाशदर्णाय पराक्षराय ।
पंचाक्षरेशाय जगद्धिताय ॥ नमोस्तु

பஞ்சாநநாயாகில பாஸ்கராய
பஞ்சாசர்ணாய பராக்ஷராய |
பஞ்சாக்ஷரேசாய ஜகத்திதாய. (நமோஸ்து)

ध्यानं த்யானம்

ज्वलनकुटिलकेशं — ஜ்வலநகுடிலகேசம்

(முன்போல் சொல்லவும்)

Koviloor Digital Library

नीलकण्ठाय रुद्राय शिवाय शशिमौलिने ।
भवाय भवनाशाय पक्षिराजायते नमः ॥

நீலகண்டாய ருத்ராய சிவாய சசிமௌளினே ।
பவாய பவநாதாய பக்ஷிராஜாயதே நம:

परात्पराय घोराय शंभवे परमात्मने ।
सर्वाय निर्मलांगाय सालुवाय नमो नमः ॥

பராத்பராய கோராய சம்பவே பரமாத்மனே ।
ஸர்வாய நிர்மலாங்காய ஸாலுவாய நமோ நம: ॥

गंगाधराय सांबाय परमानन्द तेजसे ।
सर्वेश्वराय शान्ताय शरभाय नमो नमः ॥

கங்காதராய ஸாம்பாய பரமானந்த தேஜஸே ।
ஸர்வேச்வராய சாந்தாய சரபாய நமோ நம: ॥

वरदाय वरांगाय वामदेवाय शूलिने ।
गौरीशाय गिरीशाय गिरिजापतये नमः ॥

வரதாய வராங்காய வாமதேவாய சூலினே ।
கௌரீசாய கிரீசாய கிரிஜாபதயே நம: ॥

श्री शरभेश्वराष्टकस्तोत्रं संपूर्णं ।

ஸ்ரீ சரபேச்வராஷ்டக ஸ்தோத்ரம் ஸம்பூர்ணம்.

Koviloor Digital Library

ओं

अस्य श्री शरभेश्वर महामन्त्रस्य कालाग्नि रुद्रऋषि : जगतीच्छन्द : श्री शरभेश्वरो देवता ॥

खें बीजं स्वाहा शक्तिः श्री शरभेश्वर प्रसादसिद्ध्यर्थे जपे विनियोग : ।

1	ओं खें खां	अंगुष्ठाभ्यां नम :
2	खं फट्	तर्जनीभ्यां ,,
3	प्राणग्रहासि प्राणग्रहासि हुं फट्	मध्यमाभ्यां ,,
4	सर्वशत्रु संहरणाय	अनामिकाभ्यां ,,
5	शरभसालुवाय	कनिष्ठिकाभ्यां ,,
6	पक्षिराजाय हुं फट् स्वाहा	करतलकरपृष्ठाभ्यां नम :

1	ओं खें खां	हृदयाय नम :
2	खंफट्	शिरसे स्वाहा
3	प्राणग्रहासि प्राणग्रहासि हुं फट्	शिखायै वषट्
4	सर्वशत्रुसंहरणाय	कवचाय हुं
5	शरभसालुवाय	नेत्रत्रयाय वौषट्
6	पक्षिराजाय हुं फट् स्वाहा	अस्त्राय फट् .

भू र्भुव : सुवरोमिति दिग्बन्ध :

ध्यानं

चन्द्रार्काग्नि त्रिदृष्टि : कुलिशवरनख : चंचलात्युग्रजिह्व :
कालीदुर्गा च पक्षौ हृदय जठरगौ भैरवो बाडबाग्नि : ।
ऊरुस्थौ व्याधिमृत्यू शरभवरमृग : चण्डवातादिवेग :
संहर्ता सर्वशत्रून् स जयतिशरभ : सालुव : पक्षिराज :

Koviloor Digital Library

लं पृथिव्यात्मने गन्धं समर्पयामि ।
हं आकाशात्मने पुष्पाणि समर्पयामि ।
यं वाय्वात्मने धूपं आघ्रापयामि ।
रं अग्न्यात्मने दीपं दर्शयामि ।
वं अमृतात्मने अमृतं निवेदयामि ।
सं सर्वात्मने सर्वोपचारान् समर्पयामि ॥

मूल मन्त्र :

ओं खें खां खं फट् प्राणग्रहासि प्राणग्रहासि हुं फट् सर्व शत्रु संहरणाय शरभ सालुवाय पक्षिराजाय हुं फट् स्वाहा ॥ 42 ॥

(पुन: अंगन्यासा: ध्यानं)

(लमित्यादि पंचोपचार पूजा)

(होमं செய்யும்பொழுது ஆஹுதி மந்த்ரங்கள்)

1 पायान्नो देव: शरभस्त्वपायात्
सदारि रोगाद्विपिनोरगाभ्यां ।
वैश्वानराम्बु करिऋक्षकेभ्य:
परेभ्यो भूतेभ्यो रुष: कृतान्तात् ॥

2 सालुवेशाय विद्महे । पक्षिराजाय धीमहि ।
तन्न: शरभ: प्रचोदयात् ॥

3 ओं खें खां खं फट् प्राणग्रहासि प्राणग्रहासि हुं फट् सर्व शत्रु संहरणाय शरभसालुवाय पक्षिराजाय हुं फट् स्वाहा ॥

4 सालुवेशायविद्महे पक्षिराजाय धीमहि ।
तन्न: शरभ: प्रचोदयात् ।

5 पायान्नो देव: शरभस्त्वपायात्
सदारि रोगाद्विपिनोरगाभ्यां ।
वैश्वानराम्बु करिऋक्षकेभ्य:
परेभ्यो भूतेभ्यो रुष: कृतान्तात् ॥

Koviloor Digital Library

ஸ்ரீ சரபேச்வரர் அவதார லக்ஷ ஹோம மஹிமை

அதிஷ்டானம் :: புதுக்கோட்டை.

பிரும்மஸ்ரீ மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரிகள்.

அருளாளர்களான மஹான்களால் அஞ்ஞானிகளான ஆன்மகோடிகள் நல்வழிப்பட்டு துன்பச்சுமையிலிருந்து நீங்கியவர்களாய் உய்விக்கப்படுகின்றார்கள். பரம பாகவதோத்தமனை ப்ரஹ்லாதன் இவ்வழியில் தலைமை தாங்கி ஜீவகோடிகளை நல்வழிப்படுத்துகிறான். "லிங்க புராணம்" என்ற உத்தம க்ருந்தத்தில் மேற்கண்ட கருத்து

"நமோ நாராயணா யேதி ஸர்வ தைத்ய குமார கான் ।
ப்ரஹ்லாதோ Sத்யாப யாமாஸ ப்ரும்ஹவித்யாம் —
ஸுசோபனம் ॥

என்றவாறு விளக்கப்படுகிறது. பிறவிப் பெருந் துன்பத்தினின்றும் விடுதலையடைய ப்ரும்ஹ வித்யை யாகிற 'ஓம் நமோ நாராயணாய' என்ற அஷ்டாக்ஷர மஹா மந்த்ரத்தை அஸுரச் சிறுவர்கட்குச் சொல்லி வைத்தான். அக் குழந்தைகளும் பயின்றார்கள். ப்ரஹ்லாதனைப் போல் உள்ளம் உருகினார்கள். ஆண்டவன் திருநாமத்தை நாத்தழும்பேற ஓதினார்கள். ஆண்டவனைக் காண ஆடிப்பாடி, ஓடியாடித் திரிந்து, கீழே வீழ்ந்து புரண்டு, அலறித்துடித்து, ஏங்கி, உரக்கக் கூவிப் பித்தர்களைப் போலவும், பேயர்களைப் போலவும், பரந்தாமனைக் காண ப்ரஹ்லாதன் தலைமையில் வழிபட்டனர். ப்ரஹ்லாதன் அச் சிறுவர்கட்குமட்டும்தானா கடவுளைக் காட்டினான்? கடவுள் இல்லையென்ற அவன் தந்தைக்கு "தூணிலும் இருப்பான்; துரும்பிலும் இருப்பான்; எங்கும் நிரம்பிய பரம்பொருளை நீ காணுதி" என்று காட்டினான் அல்லவா? சிறு குழந்தையான ப்ரஹ்லாதன் பொருட்டுத் தோன்றிய தெய்வம் ஹிரண்ய கசிபுவைக் கொன்றதோடன்றி இவ்வுலகத்தினை அழிக்க அதிபயங்கரமான கோரைப் பற்களும், தொங்குகின்ற நாக்கும், பயங்கரமான கண்களும், கூர்மையான நகங்களும் கொண்டு உலகத்

Koviloor Digital Library

தினை ஆட்டிவைத்தது. தேவர்கள் அனைவரும் அஞ்சி, சினம் தணிய நரசிம்ஹமூர்த்தியை வேண்டினர். அப்பொழுது நரகேஸரியும் தேவர்களின் ஸ்தோத்திரத்தினால், மேலும் உற்சாகத்துடன் உலகத்தை அழிக்க முற்படுபவர் போல் தோன்றினர். அப்பொழுது தேவர்கள் ஒன்றும் தோன்றாத வர்களாய் அவர் முன்னிலையில் நிற்கச் சக்தியற்றவர்களாய் மஹா கைலாஸத்தினை யடைந்து பார்வதிகாந்தனை ஸ்துதி செய்தார்கள்.

" நமஸ்தே காலகாலாய நமஸ்தே ருத்ர மன்ய வே
நமச்சிவாய ருத்ராய சங்கராய சிவாய தே
உக்ரோஸி ஸர்வபூதானும் நியந்தாஸி சிவோஸி ந:
ஸம் தப் தாஸ் மோ பயம் தேவா ஹரிணு அமித தேஜஸ:
ஸர்வலோக ஹிதானயனம் தத்வம் ஸம்ஹர்த்து
மர்ஹதி "

காலகாலனுன பரமேச்வர! தங்கட்கு நமஸ்காரம். உங்களை சிவம், ருத்ரன், உக்ரன், சகல ஜீவர்களையும் அடக்குகிறவன் என்று வேதங்கள் கூறுகிறதல்லவா? பயங்கரமான உருவத் துடன் ஹ்ரண்யனை வதம்செய்ய அவதரித்த நரஸிம்ஹமூர்த்தி யின் தணியாச் சினத்தைத் தணிக்க வேண்டினர். பரமேச்வர னும் வீரபத்ரனை அழைத்து, 'ஸிம்ஹரூபியான ஸ்ரீமந் நாரா யணனை ஸ்துதிசெய்து கோபம் தணிக்குமாறு வேண்டுவாயாக' என அருளினர், ஆயிரம் கைகளுடன் கூடிய அகோர வீரபத்ர ரும் நரஸிம்ஹ மூர்த்தியைத் தரிசித்து ஸ்துதி செய்தார்.

" ஜகத் ஸுகாய பகவன் அவதீர்ணேஸி மாதவ
அனேன ஹரிரூபேண ஹிரண்கசிபுர் ஹத:
அத்யந்த கோரம் பகவன் நரஸிம்ஹ வபுஸ்தவ
உபஸம்ஹர விச்வாதிமன் த்வமேவ மம ஸந்நிதௌ "

ஹே நரஸிம்ஹமே! உலகத்தின் ஸுகத்திற்காக தாங்கள் அவதரித்துப் பரமதுஷ்டனுன ஹிரண்ய கசிபுவைக் கொன்று நல்ல காரியம் செய்தருளினீர்கள். இந்தக் கோர உருவத்தினை என் முன்னிலையில் இப்பொழுதே அடக்கிக்கொள்ள வேண்டும் என்று மிகவும் பணிவுடன் வேண்டினர். ஆனால் நரஸிம்மமோ

Koviloor Digital Library

அடங்குவதாக இல்லை. அதிகமான கோபத்துடன் வீரபத்ரரைக் கட்டி இழுத்து ஹிம்ஸை செய்யத் தொடங்கியது. அப்போது வீரபத்ரர் கைலாஸபதியான ஸ்ரீ பரமேஸ்வரனைத் தியானம் செய்தார். அத்தருணத்தில் கோடி சூர்யன் உதித்தது போன்று ஒரு ஜோதி வீரபத்ரரை யடைந்து, அவருடைய சரீரம் உருக்கி வார்த்த தங்கத்தைப் போல உவமை காண இயலாத ஜோதிர்மயமாய் விளங்கியது. திடீரென்று அவர் சரீரம் பாதி பயங்கரமான மிருகமாகவும், பாதி பயங்கரமான பக்ஷியாகவும் உருவெடுத்தார். கூர்மையான மூக்கும், உருண்டு திரண்டு ஒளி வீசுகின்ற கண்களும், நீண்ட வாயும், மிகக் கூர்மையான பற்களும், கூர்மையான நகங்களும், இரு இறக்கைகளும், எட்டுக் கால்களும், இதுவரை எங்கும் காணுத மிருக பக்ஷியாய், பிரும்ம ச்ருஷ்டியில் அகப்படாததாய் பரசிவமானது சரபாகாரமாய் வீரபத்ரரின் உடலில் தோன்றினர்.

''ஸம்ருகார்த்த சரீரேண பக்ஷமாப்யாம் சஞ்சுனுத்
விஜா : ।
அதி தீக்ஷ்ண மஹாதம்ஷ்ட்ரோ வஜ்ர துல்ய
நகாயுதா : ॥

என வியாஸ முனிவர் கூறுவார். இவரைக் கண்டதும் ஸ்ரீ நரஸிம்ஹ மூர்த்தியும் சினம் தணிந்தார்.

''ஹரிஸ் தத் தர்சனு தேவ வினஷ்ட பல விக்ரம :
பிதன்முரஸி பாஹுப்யாம் நிஜக்ராஹ ஹரோஹரிம் : ॥

ஸ்ரீ சரபமூர்த்தி தனது இறக்கைகளாலும், கால்களாலும் ஸ்ரீ நரஸிம்ஹத்தைக் கட்டியணைத்து சினம் தணித்தார். பரம ஸாத்வீக மூர்த்தியான ஸ்ரீமந் நாராயணன் ஹிரண்யனைக் கொன்று, அவனது குடலை மாலையாக அணிந்து, அவனது குருதியைக் குடித்ததால் ரஜோகுண மேலிட போர் செய்ய முயன்ருர். ஸ்ரீ சரபமூர்த்தியும் விண்ணில் எழுந்து பறந்து ரக்த பானத்தால் வந்த ரஜோகுணத்தைப் போக்கினர். ஸ்ரீ நரஸிம்ஹமும் தெளிந்து நிகழ்ந்ததை நினைந்து வருந்தி 18 ச்லோகத்தினுல் அஷ்டோத்தர சதநாமம் சொல்லி ஸ்துதித்தார்.

Koviloor Digital Library

"நமோருத்ராய ஸர்வாய மஹாக் நாஸாய விஷ்ணவே |
நம உக்ராய பீமாய நமக்ரோதாய மன்யவே ||"

என்றவாறு ஸ்துதித்தார். அச்சமயம் தேவர்களும் மஹர்ஷிகளும் சரபஸ்வாமியை வணங்கிப் போற்றினார்கள். அப்பொழுது சரபேச்வரரும் நரஸிம்ஹத்துடன் இரண்டரக்கலந்து தேவர்களைப் பார்த்து அருள்மொழி கூறினர்.

"யதா ஜலே ஜலம் க்ஷிப்தம் க்ஷீரம் க்ஷீரே க்ருதங் க்ருதே
ஏகயேவ ததா விஷ்ணு: சிவ லீநோ நசான்யதா:"

ஜலமும் ஜலமும், பாலும் பாலும், நெய்யும் நெய்யும் ஒன்றுடன் மற்றொன்று கலந்தால் எப்படியோ அதுபோல் விஷ்ணுவும் என்னிடத்தில் உள்ளவர். நாங்கள் இருவரும் ஒருவரே. கோபம் அடங்கவே நாங்கள் இருவரும் இத்தகைய உருவத்தை எடுத்தோம். ஹிரண்யன் போன்ற துஷ்டர்களின் கொடுமையை அடக்க ஹரியும், அவர் சினத்தைத் தணிக்க நானும் தோன்றினோம். இனி நாங்கள் இருவரும் ஒருவரே என்று வணங்குங்கள்.

"ந்ருஸிம்ஹ க்ருத்தி வஸன: ததாப் ப்ருபிருதி சங்கர:"

அன்று முதல் நரஸிம்ஹத்தையே தனக்குக்கு வஸ்திரமாக வைத்துக்கொண்டு சரபேச்வரன் தோற்றமளிக்கிறார்.

"இதம் து சரபாகாரம் பரம் ரூபம் பிநாகின:
ப்ரகாசி தவ்யம் பக்தேஷு சிரேஷு உத்யமி தேஷுச"

இந்த சரபாகார மூர்த்தியை சிவபக்தர்களிடத்திலும், நற்பணியில் ஈடுபடுகின்ற உத்தமர்களிடத்திலும் பரப்பவேண்டும். இந்த சரபஸ்வாமியை பேராபத்து, பூகம்பம், தீவிபத்து, மண்மழை பெய்யும் சமயம், குறை கொள்ளி விழும் சமயம், இடி, மழை, புயல், மின்னல், பரிகாரம் காணமுடியாத துன்பம், வைத்ய முறையில் காணாத வியாதி, அபம்ருத்யு, கெட்ட ஸ்வப்பனம், பைத்தியம், விஷபயம், பூதப்ரேத பிசாசபயம், பகைவர் படையெடுப்பு போன்ற காலங்களில் சரபமூர்த்தியை ஜபம், பூஜை, ஹோமம் முதலான புண்ய கர்மாக்களால் வழிபட்டு,

Koviloor Digital Library

சாஸ்திரங்களில் கூறியுள்ளபடி யந்திரம் செய்து தரித்துக் கொண்டால் மேற்குறித்த அத்தனை கஷ்டங்களும் நிவர்த்தி யடையும்.

"ஸர்வ விக்ன ப்ரசமனம் ஸர்வ வியாதி விஞசனம்
அரிசக்ர ப்ரசமனம் ஸர்வ துக்க விஞசனம்
அத்ரான் யோத்பாத பூகம்ப, தாவாக்னி பாம்ஸு
வ்ருஷ்டிஷு
ததோ துர்ஸ்வப்ன சமனம் ஸர்வ பூத நிவாரணம்
விஷக்ரக க்ஷயகரம் புத்ரபௌத்ராதி வர்த்தனம்"

"தத்ரக்ஷா தாரணம் குர்யாத் ஜங்க மாங்கே வரானனே"

இத்தகைய ரக்ஷையை அணிகின்றவர்கள் மேற்கூறிய துன்பங்களினின்றும் விடுபடுவார்கள் என்று பிரும்மா ஸரஸ் வதியிடத்தில் கூறியதாக லிங்கபுராணத்தில் 96-வது அத்யா யத்தில் வியாஸாசார்யாள் உலக க்ஷேமத்தின் பொருட்டுக் கூறுகிருர். பெருந்தகைகளான வியாஸர், சுகர், ஸதாசிவ ப்ரும்மேந்திரர் போன்ற மஹான்கள் உதித்த இந்த நாட்டில் ஸ்ரீ ஜகத்குரு பரமாச்சார்யாள் பிரபஞ்ச சாரத்தில் சரப சாளுவ மந்திரத்தை ஜப, பூஜா, ஹோம, யந்த்ர ப்ரயோகங்களுடன் விளக்கியுள்ளார்கள். ஸத்குரு ஸ்ரீ சாந்தானந்த ஸ்வாமிகள், ஜகத்குரு சங்கர பகவத் பாதாள் கூறிய அருளாணையின்படி புதுக்கோட்டையில் அதிஷ்டானத்திற்குள் 4—6—71 முதல் 1—7—71 வரை இந்த புண்ய கர்மாவை மஹோன்னதநிலையில் செய்ய உள்ளத்தில் இடங்கொண்டுள்ளார்கள். என்னே, உலகம் செய்த பாக்யம்! இத்தகைய புண்யமான ஹோம பலத்திஞல் உலகில் உள்ள துன்பங்கள் யாவும் மறைந்து, பசுமையை அடைந்து நல்வாழ்வு வாழ்வோமாக.

விருப்பமுடையவர்கள் ஸ்ரீ சரப லக்ஷ ஹோமத்தில் வைத் துள்ள வெள்ளியாலான ஸ்ரீ சரப மஹா யந்திர ரக்ஷைக்காக ரூ. 15/– அதிஷ்டானத்திற்கு அனுப்பி, ஸ்ரீ சரப ரக்ஷையைப் பெற்றுக்கொண்டு. ஸ்ரீ சரபேச்வர ருத்ர மூர்த்தியின் திருவரு ளுக்கும், ஸ்ரீ மாதா புவனேச்வரி தேவியின் கடாக்ஷத்திற்கும் பாத்திரமாகக் கோருகிருேம்.

Koviloor Digital Library

உ

சிவமயம்.

ஸ்ரீ சரபேசுவர பஞ்சரத்தினம்

காப்பு.

ஐந்துமுகம் கொண்ட பிரான் ஆளேறு வேண்டுபிரான்
இந்துமுக தேவிக் கிடந்தந்தான் — பந்தமது
வாழ்வு தருஞ்சரபன் மான்மியத்தை யேரம்பன்
சூழ்வுசெய்து வாக்கில் வரும்சொற்று.

இரணியகசிபு கொடுமையை யடக்க
இரும் பெருந் தம்பத்தே யெழுந்த
முரணியல் மூர்த்தி நரவரி சினத்தை
முறையுற அடக்கவே மனங்கொள்
தரணியத வத்தின் தலைவனும் பெருமான்
சரபனுய் அணைந்த வெம்பெருமான்
கரணிய கருமம் கருணைபாற் புரிந்த
கடவுளை வணங்குவம் கனிந்தே (1)

உலகெலா நடுங்க உயிரெலாம் குழம்ப
ஒருசிறு மதலையின் பொருட்டா
அலகிலா வலிமை விளக்கிய அரியன்
அகத்தெழு சினமெலாம் அடங்க
விலகிலா வருளாற் சரபமாயெழுந்த
வேத வேத்தியனையே வணங்கி
நலனெலாம் பெறுவாய் தீங்கெலாம் ஒழிப்பாம்
நாவினுல் அவன்புகழி சைத்தே (2)

Koviloor Digital Library

புதுவை மாநகரிற் புவனநாயகியின்
பொற்றிருக் கோயி லினகத்தே
விதுவை வேணியிலே விளங்கவே முடித்த
வேதியன் சரபனல் வேள்வி
மதுவையே பிலிற்றும் மலர்களேபிறவே
வரம்பெற விரோதி கிருதுவில்
மதுர வைகாசி அத்தமே முதலா
விருமத்த நாள்வரை யுளதே (3)

அத்தநாள் வெள்ளியுடன் பொருந்தியதே
ஆனியில் வியாழ னுடைமைந்தே
சுத்தமாம் சுகத்தைத் துருவிய முனிவர்
தூய்மையே வடிவமாம் குரவர்
அத்தமே அடைந்து சரணமே மறவா
அனுபவி சாந்த வானந்தர்
வைத்த தாரகையின் ஓமமே புதுவை
மாநகர் பெறுந் திருத்தவமே (4)

அகப்பகை அடங்கப் புறப்பகை யொழிய
ஆன்மகோடிகள் தமக்கருளும்
சகப்பெருந் தலைவன் சரபமாம் பரமன்
சரண பங்கயம் தலையமர
மிகப்பெரும் தவத்தாற் துணிவினையடைந்த
மேன்மைசால் சாந்தவானந்தர்
இகப் பெருநலமும் பிறப் பெருநலமுமா
இசைக் குநல் மகமியற்றினரே.

Koviloor Digital Library

வாழ்த்து.

வாழியுலகம் வாழி உயிர்வருக்கம்
வாழி சரபபத மாமலரே — வாழி
புதுவை நலர்மக்கள் போற்றுபுவனேசி
முதுவை யருள் பாதமலர்.

— புவனேச்வரிதாஸன்.

கோவிலூர்
KOVILOOR
MADALAYAM
மடாலயம்

அன்பளிப்பு : செயின் பிரிண்டர்ஸ், திருச்சிராப்பள்ளி - 1